**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**<u>முன்னிலை:–</u> செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ம் நாள் திங்கட்கிழமை

**STC – 137/2024**

**(CNR No. TNTI150003552024)**

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | STC.No: 137 of 2024 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண்.<br>(Name of the Police Station and Crime Number) | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>வெள்ளகோவில் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 295/2023)<br>... புகார்தாரர் |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | ஆனந்தன் (45/2023),<br>த/பெ. மணி,<br>3/53, வடக்கு தெரு,<br>K.பாறைப்பட்டி,<br>செக்கானூரணி,<br>கொக்கிகுளம்,<br>மதுரை மாவட்டம்.<br>... எதிரி |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரியின் முகவரி (Residence) | |
| 7. | எதிரியின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurrence) | 10.08.2023 |
| 9. | புகார் தேதி (Date of complaint) | 11.08.2023 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Date of Arrest) | 14.08.2023 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Date of Release on Bail by Police) | 14.08.2023 |
| 12. | Date of Commitment | Not Applicable |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Date of commencement of Trial) | 20.12.2024 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 24.08.2026 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or order) | எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 279, 338 குற்றச்சாட்டுகள் **அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால்** எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை **கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை** செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (ii) எதிரி ஏற்கனவே |



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:36:14 +0530

| | | |
|---|---|---|
| | | இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of judgment or finding on accused) | Yes. Copy of the Judgment uploaded on the CIS and made available on E-courts portal |
| 17. | கால தாமதத்திற்கான காரணம் (Explanation of delay) | No such inordinate delay |

இம்மனுவானது இறுதியாக 24.08.2026ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் நிலை 1 காங்கேயம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி.M.மோகனப்பிரியா, பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் நிலுவையில் இருந்து வந்த வழக்கின் ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**தீர்ப்புரை**

இந்த வழக்கில் எதிரியின் மீது சட்டப்பிரிவு 279, 338 இ.த.ச–ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

1.1) இவ்வழக்கில், கடந்த 10.08.2023 அன்று மாலை 04.00 மணியளவில், கோவை – திருச்சி ரோடு, வெள்ளகோவில், அய்யாவு பைப் கம்பெனி அருகில், சாட்சி அனுசுயாதேவி என்பவர் TN 42 Y 3989 என்ற பதிவு எண்ணுள்ள Hero Pleasure இருசக்கர வாகனத்தில் தனது குழந்தைகளை பின்னால் அமர வைத்துக்கொண்டு, மேற்படி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, சாலையின் இடதுபுற ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, அதே சாலையில் அதே திசையில் அவருக்குப் பின்னால் எதிரி ஆனந்தன் என்பவர் TN 38 N 3656 என்ற பதிவு எண்ணுள்ள அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச் சென்று, சாட்சி அனுசுயாதேவி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:36:22 +0530

ஏற்படுத்தியதாகவும், அதன் காரணமாக சாட்சி அனுசுயாதேவிக்கு வலது கனுக்காலில் கொடுங்காயம் ஏற்பட்டதாகவும் கூறி, எதிரி மீது இதச சட்டப் பிரிவுகள் 279 மற்றும் 338–ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைதல் :**

2.1) இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 08.11.2024 அன்று இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக கருதியதால் 20.12.2024 அன்று எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, மற்றும் 338 ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார்.

**3. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்:**

3.1) **அ.சா.1 திருமதி. அனுசுயாதேவி** என்பவர் இச்சம்பவத்தில் தான் பாதிக்கப்பட்டது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.2) **அ.சா.2 திரு. மோகன்** என்பவர் பார்வை மகஜரில் கையெப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.3) **அ.சா.3 திரு. அர்ச்சுணன்** என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

3.4). இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளில் ப.சா.2 கண்ணுற்ற சாட்சியாவார். ப.சா.2 சாட்சிக்கு அழைப்பாணையும், முறையான பதிவஞ்சலும் அனுப்பப்பட்ட போதிலும், அவர்


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:36:26 +0530

குறிப்பிட்ட முகவரியில் இல்லாத காரணத்தால், **"Insufficient Address"** என்ற காரணத்துடன் அஞ்சல் 20.02.2026 அன்று திரும்பப் பெறப்பட்டது. எனவே, அரசு தரப்பில் ப.சா.2 சாட்சி நீக்கம் செய்யப்பட்டு, ஏனைய சாட்சிகள் விசாரிக்கப்பட்டதன் மூலம் இவ்வழக்கின் விசாரணை முடிக்கப்பட்டது.

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. கு . வி . மு . ச பிரிவு 313(1)( b ) ன் படி வினவுதல்:**

4.1) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எடுத்துக் கூறி குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் 24.08.2026 அன்று வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சியம் என்றும், மேலும் அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் இல்லை என்றும் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

***இவ்வழக்கில் இனி காண வேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீதான இதச பிரிவு 279, மற்றும் 338–ன் கீழான குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.***



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:36:31 +0530

## 6. தீர்வு

6.1) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279, மற்றும் 338–ன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட எதிரி தனது அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவான செயலை செய்வதன் மூலம் யாரேனும் ஒருவருக்கு கொடுங்காயங்கள் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

6.2) இந்த வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக, விபத்து ஏற்படுத்திய வண்டி அடையாளப்படுத்தலும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வண்டியைஎதிரிதான் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவாக ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி பாதிக்கப்பட்டவருக்கு கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

6.3) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கு விபத்து சம்பவத்திற்குரிய வாகனத்தை எதிரிதான் ஓட்டினார் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், விபத்தானது எதிரியால் நடைபெறவில்லை என்றும் இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தவறதலாக எதிரியின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று எதிரியை விடுதலை செய்யக்கோரினார்.

6.4) இவ்வழக்கில் அரசு தரப்பில் புகார்தாரரும், காயமடைந்த சாட்சியுமான அ.சா.1 அனுசியா தேவி தனது சாட்சியத்தில், கடந்த 10.08.2023 அன்று மாலை 04.30 மணியளவில், தனது மகன் மற்றும் மகளை பின்னால் அமர வைத்துக்கொண்டு, இருசக்கர வாகனத்தில் திருச்சி – காங்கேயம் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, தங்களுக்குப் பின்னால் வந்த கோவை – திருச்சி செல்லும் ஏசி பேருந்து தங்களது இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவ்விபத்தில் தனக்கு


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:36:35 +0530

வலது பாதத்தில் எலும்பு முறிவு உள்ளிட்ட காயங்கள் ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தனது குழந்தைகளுக்கும் காயங்கள் ஏற்பட்டதாகவும், சம்பவ இடத்தில் மயக்கமடைந்த தன்னை அருகிலிருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் கோவை கங்கா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், எதிரியை அடையாளம் காட்டுவதற்காக மீண்டும் விசாரிக்கப்பட்டபோது, ஆஜரான எதிரி பேருந்தை வேகமாக ஓட்டி வந்து தங்களது இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் காயமடைந்த சாட்சியான அ.சா.1-ன் முதல் மற்றும் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், விபத்தானது சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றதாகவும், அவரது இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.1-ன் சாட்சியத்தை முழுமையாகப் பரிசீலனை செய்யும்போது, விபத்திற்கு முழு காரணம் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையான செயல் தான் என்பது அரசு தரப்பில் அ.சா.1-ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் முக்கிய சாட்சியான அ.சா.1-ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு உதவும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.5) இவ்வழக்கில் அரசு தரப்பில் பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.2 மோகன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கோவை – திருச்சி ரோட்டில் அய்யாவு பைப் கம்பெனி அருகில், மாலை சுமார் 04.30 மணியளவில், காவல்துறையினர் விபத்து நடைபெற்ற சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6.6) மேலும், இவ்வழக்கில் புலனாய்வு அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அர்ச்சுணன், தனது சாட்சியத்தில், கோவை கங்கா மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட இண்டிமேசன் அடிப்படையில் அ.சா.1-ஐ விசாரித்து வாக்குமூலம் பெற்று, குற்ற எண்.295/2023, 279, 337 IPC-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.09.07 18:36:40 +0530

செய்யப்பட்டதாகவும், பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து, சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்ததாகவும், விபத்தில் தொடர்புடைய அரசு பேருந்து மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி, அதற்கான அறிக்கைகளைப் பெற்றதாகவும், அ.சா.1–ன் மருத்துவ ஆவணங்களைப் பெற்று, அவரது காயம் கொடுங்காயம் என தெரியவந்ததையடுத்து, வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 IPC–லிருந்து 279, 338 IPC ஆக மாற்றி, புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.7) மேலும் விபத்தில் பாதிக்கப்பட்ட நபாரன அனுசுயாதேவி என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் திரு. குமணன் காயம்பட்ட அனுசுயாதேவி என்பவரது காயச்சான்று அறிக்கையில் அவருக்கு வலது கனுக்காலில் ஏற்பட்ட காயங்கள் கொடுஙகாயங்கள் என்று சான்று வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.9 ஆகிய காயச்சான்றிதழை பரிசீலிக்கும் போது அனுசுயாதேவி என்பவருக்கு விபத்து சமயத்தில் காயங்கள் ஏற்பட்டது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.8) மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி விபத்துக்கு வாகனத்தின் இயந்திரக்கோளாறுகள் ஏதும் காரணமில்லையெனவும் தெரிய வருகிறது. ஆனால் ஏற்கனவே கண்ட பரிசீலனைகளின் படி மேற்படி வாகனத்தை எதிரி தான் ஓட்டி வந்தார் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படாததால் மேற்படி வாகனத்தில் உள்ள சேதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த வழக்கு சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டார் என கூற முடியாது.

6.9) அ.சா.1 முதல் 3 வரையிலான அரசு தரப்பு சாட்சியங்கள் தகுந்த சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கில் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளர் திரு. அர்சுணன் (அ.சா.3)ன் சாட்சியத்தை மட்டும் நிலைமுறை சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது. மேற்படி அ.சா.3 ன் சாட்சியத்தை வைத்துக்கொண்டு, எதிரி மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்காண் சூழ்நிலைகளும், அ.சா.1ன் சாட்சியமும் எதிரி மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

6.10) மேற்படி சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்ய இயலாது. ஏனெனில் அ.சா.1 புகார்தாரர் சாட்சியாகவும், காயம்பட்ட சாட்சியாகவும் உள்ளார். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக எவரும் விசாரிக்கப்படாத நிலையில் அ.சா.1ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அ.சா.1 எதிரியின் குற்றங்களை நிரூபணம் செய்யும் வகையில் தெளிவாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேற்படி சாட்சிகள் வழக்கு சம்பவத்தன்று எதிரி தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மற்றும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளித்திடாதது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.11) மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரியின் மீதான இ.த.ச.பிரிவு 279, மற்றும் 338 ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:36:49 +0530

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து மேற்கண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,**

*(i) எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 279, மற்றும் 338 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*(ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து தனியாக எந்த உத்தரவும் இல்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறிய பகரப்பட்டு, அன்றே CIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, E–Courts இணையதளத்தில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:36:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காங்கேயம்.

**<u>இணைப்பு:</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**:

| அ.சா வரிசை எண் | பெயர்கள் | விளக்கம் | முதல் விசாரணை தேதி | குறுக்கு விசாரணை தேதி |
|---|---|---|---|---|
| அ.சா.1 | திருமதி. அனுசுயாதேவி | புகார்தாரர் சாட்சி | 12.09.2025 | 20.11.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.2 | திரு. மோகன் | பார்வை மகஜர் | 20.11.2025 | 20.11.2025 |
| அ.சா.3 | திரு. அர்ச்சுணன் | புலன் விசாரணை அதிகாரி | 14.08.2026 | 14.08.2026 |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| வரிசை எண் | விளக்கம் | சாட்சி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை (FIR) | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | TN 38 N 3656 ASHOK LEYLAND வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | TN 42 Y 3989 Honda Pleasure இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | பணி ஒதுக்கீடு சான்று நகல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | கோவை கங்கா மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | கோவை கங்கா மருத்துவமனை வழங்கிய காயச்சான்று | அ.சா.3 |
| அ.சா.ஆ.10 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.3 |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u>**

இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், எதிரி தரப்பு சான்றாவணங்கள், எதிரி தரப்பு சான்று பொருள்கள்:-</u>**

இல்லை.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:36:59 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
2. எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவாக, எதிரி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
5. தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.09.07 18:37:03 +0530